(ஒன்பதாவது பாராளுமன்றம் - இரண்டாவது கூட்டத்தொடர்)

**இல. 36.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2022 யூன் 07 செவ்வாய்க்கிழமை, மு.ப. 10.00 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

2002/2022

கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன,— சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஸ்வர்ண பூமி, ஜய பூமி, இசுரு பூமி மற்றும் ரன் பூமி காணி உறுதியுடைய உரிமையாளர்கள் இறந்ததன் பின்னர் அக்காணிகளின் உரிமைத்துவம் தொடர்பாக நிலவும் சட்ட ரீதியான நிலைப்பாடு யாதென்பதையும் ;

(ii) மேற்குறிப்பிட்ட காணிகளின் பின்னுரிமை குடும்பத்தின் மூத்த பிள்ளைக்கு மாத்திரம் கிடைக்கப்பெறுவதன் காரணமாக பல சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன என்பதையும்;

(iii) காணியின் உரிமைத்துவம் தனது ஏனைய சகோதர/சகோதரிகளுக்கு வழங்கப்படுவதை அவர் மறுக்கும் பட்சத்தில் அச் சகோதர/சகோதரிகளுக்கு கிடைக்கும் சட்டரீதியான பாதுகாப்பு யாதென்பதையும்;

(iv) இதனுடன் தொடர்புடைய சட்டங்களைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(v) ஆமெனில், அதன் தற்போதைய முன்னேற்றம் யாதென்பதையும்;

(vi) மேற்குறிப்பிட்ட காணிகளின் மரபுரிமையானது குடும்பத்தின் பிள்ளைகளுக்கிடையில் சமமாகப் பிரிந்து செல்லும் வகையில் உரிய உறுதிகளை தயாரிப்பதில் நிலவும் தடைகள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேலே (அ) (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள காணிகளை துண்டுகளாக்கும் போது கவனத்திற்கொள்ளப்பட வேண்டிய பிரிவிடல் மட்டுப்பாடுகளானவை மேட்டு நிலம் மற்றும் சேற்று நிலம் என்ற அடிப்படையில் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(ii) அப்பிரிவிடல் மட்டுப்பாடுகள் காரணமாக பல சிக்கல்கள் எழுந்துள்ளன என்பதையும்;

(iii) ஆமெனில், அதற்குரிய தீர்வுகள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

2004/2022

கௌரவ (மேஜர்) பிரதீப் உந்துகொட,— கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில்முயற்சிகள் மூலதனக் கம்பனியில் ஏதேனும் முறைகேடு, முறையற்ற நியமனம், ஊழல் செயற்பாடு அல்லது சட்டத்திற்கு முரணான செயற்பாடு இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு விடயம் காரணமாக அரசாங்கம் இழந்துள்ள நிதி, சொத்துக்கள் மற்றும் மனித வளங்களின் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் தெரிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி (அ) (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளுக்குப் பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்களை இனங்காண்பதற்காக புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) மேற்படி புலனாய்வுகளின் மூலம் பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் இனங்காணப்பட்டிருப்பின், அவர்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி அலுவலர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை எனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) அவர்களுக்கெதிராக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(v) எதிர்வரும் காலங்களில் இடம்பெறக்கூடிய இத்தகைய செயற்பாடுகளைத் தடுப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

2012/2022

கௌரவ கே.பீ.எஸ். குமாரசிறி,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனுராதபுரம் மாவட்டத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் மற்றும் கமநல அபிவிருத்தி பகுதி அலுவலர் பதவிகளின் எண்ணிக்கை;

(ii) இன்றளவில் மேற்படி பதவிகளில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை;

(iii) மேற்படி பதவிகளில் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை,

வெவ்வேறாக எத்தனை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அனுராதபுரம் மாவட்டத்தில் நிறுவப்பட்டுள்ள கமநல சேவை நிலையங்களின் எண்ணிக்கை எத்தனை;

(ii) அவற்றினூடாக விவசாயிகளுக்கு தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்குவதற்காக ஏதேனும் வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதா;

(iii) மேற்படி நிலையங்களூடாக விவசாயிகளுக்கு விதைகளை பெற்றுக்கொடுப்பதற்கு ஏதேனும் வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதா;

(iv) ஆமெனில், பெற்றுக்கொள்ளக் கூடிய விதைகள் யாவை;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) விதை இறக்குமதி செய்வதற்காக வருடாந்தம் உறப்படும் செலவினம் எவ்வளவு;

(ii) உள்ளூர் விதைகளை மேம்படுத்துவதற்காகவும் பாதுகாப்பதற்காகவும் மேற்கொள்ளப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள் யாவை;

என்பதை அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4.

2040/2022

கௌரவ மர்ஜான் பளீல்,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையில் போக்குவரத்து பற்றிய விடயப்பொறுப்பு அமைச்சராகப் பணியாற்றிய ஒவ்வொரு அமைச்சரினதும் பெயர் மற்றும் பதவிக்காலம்;

(ii) மேற்படி ஒவ்வொரு அமைச்சரும் தமது பதவிக்காலத்தில் நியமித்துள்ள ஆலோசகர்களின் எண்ணிக்கை;

(iii) மேற்படி ஒவ்வொரு ஆலோசகரினதும் பெயர், வயது, கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள்;

(iv) ஒவ்வொரு ஆலோசகருக்கும் செலுத்தப்பட்ட மாதாந்த சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் வழங்கப்பட்டிருந்த ஏனைய வசதிகள்;

(v) மேற்படி ஒவ்வொரு ஆலோசகருக்கும் ஒப்படைக்கப்பட்டிருந்த பொறுப்புகள்;

(vi) மேற்படி ஒவ்வொரு ஆலோசகரும் மேற்கொண்டுள்ள வெளிநாட்டு விஜயங்கள், அவ்வாறு வெளிநாட்டு விஜயங்களை மேற்கொண்டமைக்கான காரணங்கள், அதற்காக செய்யப்பட்ட செலவு மற்றும் அதன் மூலமாக அமைச்சிற்கு கிடைக்கப்பெற்ற நன்மைகள்;

வெவ்வேறாக யாவை என்பதை அவர் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

2043/2022

கௌரவ குமாரசிறி ரத்னாயக்க,— நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை இந்திய உதவித் திட்டத்தின் கீழ் மொனராகலை மாவட்டத்தில் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவ்வீடுகள் எப்பிரதேசங்களில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன என்பதையும்;

(iii) குடியிருப்பதற்குத் தேவையான அடிப்படை வசதிகள் அவ்வீடுகளில் உள்ளனவா என்பதையும்;

(iv) மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின் கீழ் பணி புரியும் ஊழியர்களுக்கு மாத்திரம் மேற்குறிப்பிட்ட வீடுகளை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்ததா என்பதையும்;

(v) ஆமெனில், அத்தீர்மானத்தை மேற்கொண்ட தரப்பினர் யார் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இந்திய உதவித் திட்டத்தின் கீழ் அல்லது வேறொரு திட்டத்தின் கீழ் மொனராகலை மாவட்டத்தில் உள்ள தோட்டங்களில் மற்றும் தோட்டங்களை அண்டியதாக வாழும் மக்களுக்கு வீடுகளை நிர்மாணித்து வழங்குவதற்கான வேலைத்திட்டமொன்று உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வேலைத்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்படும் வீடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) எக்காலப்பகுதியில் அவ்வீடுகள் நிர்மாணிக்கப்படும் என்பதையும்;

(iv) அவ்வீடுகள் பயனாளிகளுக்கு வழங்கப்படும் அடிப்படை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6.

2059/2022

கௌரவ எம். டப்ளியு. ட. சஹன் பிரதீப் விதான,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையில் உபாயமுறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக பற்றிய விடயப்பொறுப்பு அமைச்சராகப் பணியாற்றிய ஒவ்வொரு அமைச்சரினதும் பெயர் மற்றும் பதவிக்காலம்;

(ii) மேற்படி ஒவ்வொரு அமைச்சரும் தமது பதவிக்காலத்தில் நியமித்துள்ள ஆலோசகர்களின் எண்ணிக்கை;

(iii) மேற்படி ஒவ்வொரு ஆலோசகரினதும் பெயர், வயது, கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள்;

(iv) ஒவ்வொரு ஆலோசகருக்கும் செலுத்தப்பட்ட மாதாந்த சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் வழங்கப்பட்டிருந்த ஏனைய வசதிகள்;

(v) மேற்படி ஒவ்வொரு ஆலோசகருக்கும் ஒப்படைக்கப்பட்டிருந்த பொறுப்புகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(vi) மேற்படி ஒவ்வொரு ஆலோசகரும் மேற்கொண்டுள்ள வெளிநாட்டு விஜயங்கள், அவ்வாறு வெளிநாட்டு விஜயங்களை மேற்கொண்டமைக்கான காரணங்கள், அதற்காக செய்யப்பட்ட செலவு மற்றும் அதன் மூலமாக அமைச்சிற்கு கிடைக்கப்பெற்ற நன்மைகள்;

வெவ்வேறாக யாவை என்பதை அவர் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

2071/2022

கௌரவ குணதிலக ராஜபக்ஷ,— வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் சுயாதீன தொலைக்காட்சிச் சேவையினதும் லக்ஹண்ட வானொலி சேவையினதும் புதிய சின்னங்களை ஊக்குவிப்பதற்காக செலவிடப்பட்ட தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் சுயாதீன தொலைக்காட்சிச் சேவை மற்றும் லக்ஹண்ட வானொலி சேவைக்காக ஆட்சேர்த்துக்கொள்ளப்பட்ட ஆலோசகர்களின் எண்ணிக்கை;

(ii) அந்த ஒவ்வொரு ஆலோசகரினதும் பெயர், கல்வி மற்றும் ஏனைய தகைமைகள், செலுத்தப்பட்ட மாதாந்த சம்பளம், கொடுப்பனவுகள், வழங்கப்பட்ட ஏனைய வசதிகள் மற்றும் அவ்வொவ்வொரு ஆலோசகருக்கும் செலுத்தப்பட்ட மொத்தத் தொகை;

யாதென்பதை வெவ்வேறாக அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) மேற்குறிப்பிட்ட ஆலோசகர்கள் சுயாதீன தொலைக்காட்சிச் சேவைக்கும், லக்ஹண்ட வானொலி சேவைக்கும் வழங்கிய சேவை யாதென்பதை அவர் மேலும் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

8.

2100/2022

கௌரவ எஸ்.எம்.எம். முஸ்ஸாரப்,— வர்த்தக, வணிக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையில் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட அரிசியின் அளவு ஒவ்வொரு வருடத்தின் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி அரிசி இறக்குமதியின் பொருட்டு செலவு செய்யப்பட்ட பணத்தொகை மேலே தெரிவிக்கப்பட்ட ஒவ்வொரு வருடத்தின் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி அரிசியை இறக்குமதி செய்த நிறுவனங்களின்/கம்பனிகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி அரிசி இறக்குமதியின் போது அறவிடப்பட்ட வரித்தொகை மேலே தெரிவிக்கப்பட்ட ஒவ்வொரு வருடத்தின் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

9.

2114/2022

கௌரவ இஷாக் ரஹுமான்,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை போக்குவரத்துச் சபையின் வசமுள்ள பேருந்துகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) சபையில் இன்றளவில் பணியாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கை போக்குவரத்துச் சபையின் வசமுள்ள பயணிகள் போக்குவரத்துப் பேருந்துகளில் தற்போது அதிவேகப் பாதைகளில் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பேருந்துகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அதிவேகப் பாதைகளில் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பேருந்துகளின் மூலமாக ஆரம்பத்திலிருந்து இதுவரை கிடைக்கப்பெற்றுள்ள வருமானம் மற்றும் மேற்படி பேருந்துகளுக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள செலவினம் தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(iii) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இது வரை இலங்கை போக்குவரத்துச் சபையின் வருமானம் மற்றும் செலவினம் ஆண்டு வாரியாக தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினாலும், 2022 சனவரி 19 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரங்கள் மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும் பி.ப. 1.30 மணி முதல் பி.ப. 5.30 மணி வரையும் இருக்குமாக. மு.ப. 11.30 மணிக்கு 8(5) ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளை தொழிற்படுமாக. பி.ப. 5.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்கள் (இல.1),— 2022 யூன் மாதம் 02 ஆம் திகதி தெரிவுக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறு பின்வரும் அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்களின் பெயர்கள்,

1. நிதி பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு "நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு" எனவும்;
2. நீதி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு "நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு" எனவும்;
3. கைத்தொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு "தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு" எனவும்;
4. துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு "துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவை அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு" எனவும்;
5. இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு "விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு" எனவும்; மற்றும்
6. வர்த்தக அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு "வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு" எனவும்;

மீளப் பெயரிடப்படுமாக.

3.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்கள் (இல. 2),— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 112 (1) இன் ஏற்பாடுகள் மற்றும் 2022 யூன் 02 ஆம் திகதி தெரிவுக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறு பின்வரும் அமைச்சுசார் ஆலோசைனக் குழுக்கள் பெயர் குறிப்பிட்டு நியமிக்கப்படுமாக:—

1. போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு
2. சுற்றுலாத்துறை மற்றும் காணி பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு

ஒவ்வொரு ஆலோசனைக் குழுவிற்கும் ஆற்றுப்படுத்தப்பட்ட விடயம் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக, ஒவ்வோர் அமைச்சுசார் ஆலோசனைக் குழுவும், உரிய விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரவை அமைச்சர் அதன் தவிசாளராகவும், அதன் இராஜாங்க அமைச்சர் மற்றும் பிரதி அமைச்சர் உட்பட தெரிவுக் குழுவினால் பெயர்குறிப்பிடப்படும் வேறு ஐந்து (5) பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருக்குமாக.

ஒவ்வொரு அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினதும் கூட்ட நடப்பெண் மூன்று (3) உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும்.

4.

கௌரவ (கலாநிதி) விஜயதாச ராஜபக்ஷ,— சட்டமூலத்தை மீளப் பெறுவதற்கான அனுமதி,— 2022 மே 17 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பின்வரும் சட்டமூலத்தை மீளப்பெறுவதற்கான அனுமதி வழங்கப்படுமாக :—

"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்"

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1), 6 மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 ஏப்ரல் 09 ஆம் திகதிய 2274/42 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 2.

பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர்,— உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— இதற்கு முன்னரான தீர்மானங்களின் மூலம் அதிகாரமளிக்கப்பட்ட தொகைக்கு மேலதிகமாக ரூபா 1,000,000,000,000 ஐ விஞ்சாத தொகையொன்றை இலங்கையில் இலங்கை அரசாங்கத்தின் திறைசேரி உண்டியல்களை வெளியிடுவதன் மூலம் கடனைப் பெறுவதற்கும், அதன் பொருட்டு (417 ஆவது அத்தியாயம்) உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டத்தின் 2(1) ஆம் பிரிவின் கீழ் தேவையான சகல அதிகாரங்களையும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சருக்கு வழங்குவதற்கும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 3.

இலங்கை மின்சாரம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 4.

மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர்,— பெற்றோலிய வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2021 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, பெற்றோலிய வளங்கள் சட்டத்தின் 5(3) (ஆ) மற்றும் 30(3) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, அச்சட்டத்தின் 48 ஆம் பிரிவின் கீழ் வலுசக்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 ஒக்டோபர் 15 ஆம் திகதிய 2249/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.01.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 5.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 6.

விலங்கின நலம்பேணல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 7.

குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 8.

கைத்தொழிற் பிணக்குகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

9.

சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306ஏ-தேசிய அபிவிருத்தி மன்ற நம்பிக்கை நிதியம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

10.

சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

11.

புகையிலை வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

12.

வைட் றோஸ் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

13.

ரொசான் ரணசிங்க ஜனசஹன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

14.

மனித உரிமைகள் அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

15.

சிவில் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

16.

சமாதானம், கல்வி வலுவூட்டல் மற்றும் அபிவிருத்தியிற்கான விளையாட்டு நிறுவகம் (SPEED) (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

17.

இலங்கை பட்டயப் போக்குவரத்து நிறுவனம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

1.

3339/2022

கௌரவ அநுர திசாநாயக்க,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரச உத்தியோகத்தர்களின் நலன்புரிச் சங்கம் முறையாக கணக்குகளைப் பேணாமை, ஏற்புடைய ஆவணங்களைச் சமர்ப்பிக்காமை மற்றும் நிதி சமநிலையின்மை காணப்படுகின்றமை கணக்காய்வாளர்களினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள காரணத்தினால், மேற்படி சங்கத்தில் ஊழல் மற்றும் மோசடிகள் இடம்பெற்றுள்ளன என்பதை ஏற்றுக்கொள்கின்றாரா என்பதையும்;

(ii) திறைசேரியின் செயலாளரினால் இந்த விடயம் தொடர்பில் பக்கச்சார்பற்ற முழுமையான கணக்காய்வு மேற்கொள்ளப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்குறிப்பிட்ட சங்கத்தில் இடம்பெற்றுள்ள ஊழல் மற்றும் மோசடிகள் காரணமாக மேற்படி சங்கங்கள் மற்றும் அதன் அங்கத்தவர்கள் இழந்துள்ள நிதியைக் கணக்கிட்டு அத் தொகையை மீள் நிரப்புவதற்கு திறைசேரி நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதையும்;

(iv) மேற் குறிப்பிட்ட சங்கத்தில் இடம்பெற்றுள்ள ஊழல் மற்றும் மோசடிகளுடன் தொடர்புடைய ஆட்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

3340/2022

கௌரவ அநுர திசாநாயக்க,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திறைசேரியின் செயலாளர் பொறுப்புக்களை நிறைவேற்றத் தவறியதன் காரணமாக அரச உத்தியோகத்தர்களின் நலன்புரிச் சங்கம் சீரழிந்து வருகின்றதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) 1971 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்கச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் படி மேற்படி சங்கத்திற்கு சட்டரீதியான செயலாளர் ஒருவரும் கணக்காளர் ஒருவரும் நியமிக்கப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) பதவிகளை வெற்றிடமாக வைத்திருக்கும் நோக்கத்தோடு அநாவசியமான தகைமைகளுடன் மேற்படி பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு வர்த்தமானி அறிவித்தல்கள் வெளியிடப்பட்டுள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2020.06.30 ஆம் திகதியுடன் பதவிக் காலம் முடிவுற்ற சங்கத்தின் நிர்வாக சபையினால் மேற்கொண்டும் நிதி மற்றும் நிர்வாக ரீதியான தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுவது சட்ட ரீதியானதல்ல என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனின், அது தொடர்பில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) சங்கத்தின் செயலாளருக்கும் தொழிற் சங்கங்களுக்கும் இடையில் 2020.10.16 ஆம் திகதி நடைபெற்ற கலந்துரையாடலின்போது தேர்வு நடத்தப்படும் வரை நிதி மற்றும் நிர்வாக நடவடிக்கைகளுக்காக உத்தியோகத்தர் ஒருவரை நியமிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டபோதிலும், அது தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) தற்போதைய நிர்வாக சபையானது சங்கத்தின் நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ஒப்பந்த அடிப்படையில் ஓய்வு பெற்ற ஊழியர் ஒருவரை நியமிப்பதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(v) மேற்படி சங்கத்தின் சீரழிவுக்கு பொறுப்புக்கூற வேண்டியவர்கள் யாவர் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?